# இந்திய மக்கள் வாக்குரிமைக்கு கருவறையிலேயே கல்லறை கட்டிய தேர்தல் ஆணையத் தலைவர் ஞானேஷ்குமார்!

"ஜனநாயகத்தின் தொட்டில்" (Cradle of Democracy) என்று ஆதவன் மறையாக ஆங்கில சாம்ராஜ்ய மான இங்கிலாந்து நாட்டின் ஆட்சிமு றையை வரலாற்று ஆசிரியர்கள் வருணித் துள்ளார்கள். அந்த இங்கிலாந்து நாட்டின் ஆட்சிமுறையை பின்பற்றிய இந்தியா ஒரு காலக்கட்டத்தில் விடுதலை பெற்றபின்னர், ஜனநாயக ஆட்சிமுறையை பின்பற்றி செயல்படத் தொடங்கியது. ஆனால், இந்திய ஒன்றியத்தோடு சமகாலத்தில் விடுதலை பெற்ற அண்டைநாடான பாகிஸ்தான், சர்வா திகார ஆட்சிமுறையை பின்பற்றி செயல்பட தொடங்கியது. அவ்வாறே இந்தோனேசியா வும் சர்வாதிகார ஆட்சிமுறையை ஏற்றுக் கொண்டு செயல்பட்டு வந்தது. அன்றைய பாகிஸ்தான் அதிபராக இருந்த அதிபர் அயூப் கானிடம் தாங்கள் சர்வாதிகார ஆட்சிமு றையை ஏற்றுக்கொண்டவர்தானே என்று பத்திரிக்கையாளர்கள் கேள்வி எழுப்பியபொ முது, அதிபர் அயூப்கான் எங்கள் நாட்டில் "பாதுகாக்கப்பட்ட ஜனநாயக ஆட்சி" (Protected Democracy) முறைதான் செயல் படுத்தப்படுகிறது என்று கூறினார்.

அதுபோன்றே இந்தோனேசிய நாட்டின் அதிபர் சுகர்னோவிடம் கேட்டபொழுது, அவர் சொன்னார் "எங்கள் நாட்டில் தூண்டி விடப்பட்ட ஜனநாயக ஆட்சிமுறையை" (Induced Democracy) ஏற்றுக்கொண்டு செயல்படுத்துகிறோம் என்று பதில் கூறினார். எனினும் இவற்றிற்கு மாறாக ஜனநாயகத் தின் தொட்டில் என்று அறியப்பட்ட இங்கி லாந்து நாட்டில் ஆட்சிமுறை 1930களில் ஜனநாயகப் பாதையிலிருந்து தடம்மாறிச் சென்ற நிலையைக் கண்டித்து அறிஞர் பெர் ணாட்ஷா, தனது "ஆப்பிள்கார்ட்" (Apple Cart) என்ற நாடகத்தின் மூலமாக இங்கிலாந் தின் திசைமாறிய ஜனநாயக ஆட்சிமுறை கடுமையாகக் கண்டித்தார் என்பது வரலாறு.

இதுபோன்ற ஒரு வித்தியாசமான, வேறு பட்ட சூழ்நிலையில் ஜனநாயக ஆட்சிமுறை யில் இன்று உருவாகியுள்ளது. ஆம்! இந்திய நாட்டின் தேர்தல் ஆணையம் வாக்காளர் பட்டியலில் மேற்கொண்ட சிறப்பு தீவிர திருத் தத்தின் (Special Intensive Revision) மூலம் ஜனநாயகத்திற்கு குடும்ப கட்டுப்பாடு அறு வைச் சிகிச்சை முறையில் செய்திருப்பதா கவே அரசியல் ஆய்வாளர்கள் வாதப்பிரதி வாதங்களை முன்வைக்கிறார்கள். அந்த வகையில், சமீபத்தில் தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களில் நடைபெற்ற பொதுத்தேர்தல் களில், தேர்தல்கள் நடைபெறுவதற்கு முன் னரே இந்த குடும்ப கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சையின் மூலம், ஒன்றியத்தில் ஆட்சிப் பொறுப்பிலுள்ள ஆளும் பாரதீய ஜனதாக் கட்சிக்கு எதிரான வாக்காளர்களாக கருதப்ப டும் வாக்காளர்களின் பெயர்களை, வாக்கா ளர் பட்டியலின் வரிசையிலிருந்து நீக்கப் பட்டுள்ளது வெளிப்படையாகவே தெரியவந் துள்ளது.

இதன்மூலம் நீக்கப்பட்டுள்ள வாக்காளர் களின் பெயர்கள் சட்டப்படியான நடவடிக்கை யின் மூலம் நடைபெற்றதாகத் தெரிய வில்லை. ஆளுங்கட்சியான பாரதீய ஜனதாக் கட்சியின் அரசியல் லாபத்திற்காக மட்டுமே இந்திய தேர்தல் ஆணையத்தால் (Election Commission of India) மேற்கொள் ளப்பட்டுள்ளது என்பது இன்றைய தேர்தல் ஆணையம் தொடர்பான அதிர்ச்சியூட்டும் செய்திகளால் அறியமுடிகிறது.

இந்திய தேர்தல் ஆணையத்தின் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தமானது மதச்சார்போடுகூடிய உள்நோக்கம் கொண் டதாகவே கருதப்படுகிறது. இந்த ஒருதலைப் பட்சமான நடவடிக்கையின்மூலம் ஜனநா யக அமைப்புமுறையின் அடித்தளம் ஆட்டம் காண்பதோடு உண்மையான ஜனநாயகத் தின் மக்கள் பெரும்பான்மை என்றக் கோட் பாட்டை கேள்விக்குறியாக்கியுள்ளது. பல் வேறு மொழி பேசுகின்ற பண்பாட்டைப் பின்பற்றுகிற கலாச்சாரங்களை வாழ்விய லாக கொண்டிருக்கிற மக்கள் வாழும் பரந் துபட்ட இந்திய நாட்டில் ஒரு கட்சி ஆட்சி தொடர்ந்து நடைபெறுவதற்கான வாய்ப்பை உருவாக்கும் நோக்கத்தின் அடிப்படையில் வாக்களிப்பவர்களுக்கு மட்டுமே வாக்கு ரிமை வந்ததன்மூலம் வாக்குரிமையை இழந்தவர்கள், வேரற்ற மரங்களாய் உரி மையில்லாத இந்திய குடிமக்களாக சொந்த நாட்டிலேயே புறக்கணிக்கப்படுவது வேத னைகளின் உச்சமாகும்.

**ஆம்! அவர்களது வாக்களிக்கும் உரிமை இந்திய தேர்தல் ஆணையத்தின் இந்த சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தத்தின் மூலம் (SIR) நிரந்தரமாக நீக்கப்பட்டு இந்த விபரீத குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை மூலம் வாக்குரிமை பறிக்கப்பட்டிருப்பது "ஒரு தாய் குழந்தைபெறும் இயற்கையின் நியதியை பறிப்பதுபோல் ஆகிறது". "கருவறையிலே கல் லறை கட்டும் கொடுமை" இந்திய தேர்தல் ஆணையம் உண்மையான வாக்காளர்களின் வயிற்றெரிச்சலுக்கு ஆளாகியிருப்பதை அனைத்து தரப்பு மக்களும் நன்கு அறிவர்.**

தேர்தல் ஆணையத்தினுடைய தலை வர் ஞானேஷ்குமார்தான் இந்த குடும்ப கட் டுப்பாடு அறுவைச் சிகிச்சை நடவடிக்கை களுக்கும், கருவறையிலேயே கல்லறை கட்டிய கொடுஞ் செயலுக்கும் பொறுப்பாவார். அவரைத் தவிர்த்து மற்ற இரண்டு ஆணை யாளர்கள் தலைமை ஆணையாளர் ஞானேஷ்குமார் கடந்தகாலத்தில் எடுத்த முடி வுகள் பற்றி எங்களுக்கு எதுவும் தெரியாது. அவரும் அவற்றைப்பற்றி எங்களுக்கு தெரி விக்க வில்லை என்று வெளிப்படையாகவே தெரிவித்திருப்பது தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமாரின் சர்வாதிகா ரப் போக்கை படம்பிடித்துக் காட்டுகிறது.

இதில் குறிப்பாக ஆழ்ந்து பரிசீலிக்க வேண்டியது எதுவெனில், தலைமை ஆணையாளரின் பின்புலமும் அவரது கடந் தகால பணி குறித்த விபரங்களையும் அறிந்து கொள்வது இந்த சூழ்நிலையில் அவ சியமானதும் தவிர்க்க முடியாததும் ஆகிறது. அதற்கு உதாரணமாகவே ஞானேஷ்குமார் கேரள மாநிலத்தில் பொதுப்பணித்துறை செயலாளராக அவர் பணியாற்றியபொழுது, அவரது துறையில் நடந்த ஊழல்கள்பற்றி விசாரிப்பதற்கு இப்போது கேரளஅரசு ஆணை பிறப்பித்திருப்பது அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

எனவே, தேர்தல் ஆணையத்தினுடைய தலைவர் ஞானேஷ்குமாரின் கடந்தகாலங் களில் பணியாற்றிய பொறுப்புகளில் அவரது நடவடிக்கைகள் விமர்சனங்களுக்கு அப் பாற்பட்டதாக தெரியவில்லை என்பதை புரிந் துகொள்ள முடிகிறது. அவரும் அவரது குடும்ப உறுப்பினர்களும் இன்றைக்கும் பல்வேறு உயர்பதவிகளில் பணியாற்றி கொண்டிருக்கின்றனர்.

**மேலும் ஆணையத் தலைவர் செய்த தவறு களுக்காக நாடாளுமன்றத்தில் அவருக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் (Impeachment) கொண்டுவர வேண்டும் என் பதே நடுநிலை யாளர்களின் எதிர்பார்ப்பாகும். ஆனால், இன்றைய சூழ்நிலையில் அத்தகைய நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவந்து நிறைவேறுவதற்கான வாய்ப்பேயில்லை. அவர் ஓய்வுபெற்ற பின்னரும்கூட இதற்காக அவர்மீது நடவடிக்கை எடுக்க முடியாது என் கின்ற சட்டபாதுகாப்பும் அவருக்கு இருக்கிறது.**

எனவே, அவர் உடனடியாக தனது பத வியை ராஜினாமா செய்ய வேண்டும் அல் லது ஒன்றிய அரசு அவரை பதவியிலிருந்து பணிநீக்கம் செய்ய வேண்டும் அல்லது உச் சநீதிமன்றம் அவரை பதவியிலிருந்து நீக்கு வதற்கான வழிமுறைகளை உருவாக்க வேண்டும். இதன் முன்முயற்சியாகத்தான் இளைஞர்கள், மாணவர்கள் மற்றும் நல் லெண்ணம் கொண்டவர்கள் ஐந்தர் மந்த ரில் கூடி இணைந்து நாட்டின் தலைநகர் "ஜந்தர்மந்தரில்" தொடர்ந்து போராட்டத்தை முன்னெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். சமீ பத்தில் ஏறத்தாழ ஆயிரம் போராட்டக்காரர் கள் கைதுசெய்யப்பட்டு விடுவிக்கப் பட்டிருக்கின்றனர்.

**பொன். முத்துராமலிங்கம்**
முன்னாள் அமைச்சர்,
உயர்நிலை செயல்
திட்டக்குழு உறுப்பினர்



இதனைத் தொடர்ந்து இருபால் இளைஞர் கள் சார்புடைய "கரப்பான் பூச்சி ஜனதாக் கட்சியின்" (Cockroach Janatha Party) நிர்வா கிகள் இணைந்து எதிர்வரும் அக்டோபர் 10ஆம் தேதியன்று ஜந்தர் மந்தரில் இந்திய தேர்தல் ஆணையத்தினுடைய தலைவர் ஞானேஷ்குமார் தனது சட்டவிரோத நடவ டிக்கைகளுக்கு தார்மீகப் பொறுப்பேற்று உட னடியாக ராஜினாமா செய்ய வேண்டும் என்ற வலுவான கோரிக்கைகளை முன் வைத்தும் அவரது அறிவிக்கப்படாத மேலே சொன்ன குடும்ப கட்டுப்பாடு அறுவைச் சிகிச் சைமூலம் செய்த வாக்குரிமை பறிப்பிற்கு சட்டநடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் தொடர்ந்து போராட்டத்தை நடத்த வுள்ளதாகவும் அறிவித்திருக்கிறார்கள். இந்த் தப் போராட்டங்களின் நியாயங்களை எந்த சூழ்நிலையிலும் யாராலும் நிராகரிக்க வியலாது.

இத்தகைய நாடும் என்றும் கண்டிராத அசாதாரண அரசியல் சூழ்நிலையில் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தத்தின் அடிப் படையில், நடைபெற்ற தமிழ்நாடு உள்ளிட்ட ஐந்து மாநில சட்டமன்றத்திற்கு நடந்த பொதுத் தேர்தல்களின் முடிவுகள் எப்படி நியா யமானதாக இருக்க முடியும்? திராவிட மாடல் ஆட்சியின் நிறுவனர், உலகம் தழுவிய தமி ழினத்தின் கலங்கரை விளக்கம் எங்கள் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் கொளத்தூர் சட்டமன்றத் தோல்வி என்பது இந்த ஜனநாயக படுகொலைக்கான திட்டமிட்ட சதி யாகவே அனுமானிக்கத் தோன்று கிறது.

இந்த வினாவிற்கு விடைகா ணும் டெல்லியில் இன்னொரு படையெடுப்பாகத்தான், இருபால் மாணவர்களும் சேர்ந்து கரப்பான் பூச்சி ஜன தாக் கட்சியோடு கைகோர்த்து களம் காண் பதன்மூலம் "வற்றிய குளத்தில் புது வெள் ளம் பாய்வதுபோல்" இந்திய ஜன நாயகத்திற்கு புது இரத்தம் பாய்ச்ச, புதுயுகம் படைக்க புறப்பட்டிருப்பதைப் பார்த்து ஒன்றிய ஆட்சியாளர்கள் அச்சமும் கவலை யும் அடைந்துள்ளார்கள்.

**இந்திய ஜனநாயகத்தைப் பாதுகாக்க இளைஞர்கள் "ஜந்தர் மந்தரில்" மேற்கொள் ளும் போராட்டம் இந்திய ஜனநாயகம் வலு வும் பொலிவும் பெறுவதற்கு ஊட்டமாகும்!! அதற்கு ஜனநாயகத்தின் தூண்களான பாரா ளுமன்றமும், பத்திரிக்கைத் துறையும், நீதித் துறையும், நிர்வாக துறையும் தன் பங்க ளிப்பை வரலாற்றின் பக்கங்களில் பதிவு செய்யட்டும்!!! இந்திய ஜனநாயகத்தைப் பாது காக்க எந்த விலையும் கொடுக்க தயார்நிலை யில் இருக்கும் எங்கள் தளபதியார் தலைமை யில் இயங்கும் திராவிட முன்னேற்றக் கழகம் இந்த ஜனநாயக பாதுகாப்பு போராட்டத்திற் கும் தயாராகும் என்பதில் ஐயமில்லை!**

### அனைத்து வணிகர் சங்கப் பேரவை முன்னாள் தலைவர் – திருப்பத்தூர் நகரக் கழக

## முன்னாள் அவைத்தலைவர் என்.எஸ்.இளங்கோவன் மறைவு!

### க.தேவராஜ், எஸ்.இராஜேந்திரன், அ.நல்லதம்பி - முன்னணியினர் அஞ்சலி!

*திருப்பத்தூர், அக்.8-*

*திருப்பத்தூர் நகரக் கழக முன்னாள் அவைத் தலை வர் என்.எஸ். இளங்கோ வன் (வயது 85) நேற்று முன் தினம் இரவு இயற்கை எய்தினார் என்பதை அறி விக்க வருந்துகிறோம்.*



*மறைந்த என்.எஸ். இளங்கோவன், நகர மன்ற உறுப்பினர் அனைத்து வணி கர் சங்கப் பேரவைத் தலை வர், வர்த்தகர் சங்கத் தலை வர், கூட்டுறவு வங்கித் தலைவர், தமிழ்நாடு வணி கர் நல வாரிய அலுவல்கார உறுப்பினர் உள்ளிட்ட பல் வேறு பொறுப்புகளில் இருந்து பணியாற்றிய தோடு நகரக் கழக அவைத் தலைவராகவும் இருந் துள்ளார்.*

*'வணிக பூஷணம்' என். எஸ். இளங்கோவன் மறை வுச் செய்தி அறிந்து கழக முன்னணியினர் நேரில் வந்து அஞ்சலி செலுத்தினர். மாவட்டச் செயலாளர் க. தேவராஜ் நகரச் செயலா ளர், வழக்கறிஞர் எஸ். இரா ஜேந்திரன் ஒன்றியச் செய லாளர் அ.நல்லதம்பி மாவட்ட துணைச் செயலா ளர் டி.கே.மோகன், நகர அவைத் தலைவர் டி.இ. ஸ்ரீதர், டி. சந்திரசேகர், மாவட்ட திராவிட கழகத் தலைவர் கே.சி.எழிலரசன், எஸ். மணி, எஸ். பாபு, டி.சி. கார்த்திக் எக்கூர் செல்வம் உள்ளிட்ட மாவட்ட ஒன் றிய, நகரக் கழக நிர்வாகி கள் அஞ்சலி செலுத்தினர்.*

*அவருக்கு 4 புதல்வர்கள் உள்ளனர். அவரது இறுதி ஊர்வலம் நேற்று மாலை நடைபெற்றது. இதில் ஏரா ளமான கழகத் தோழர்க ளும் வணிகர்களும் பங்கேற் றனர்.*

## இந்தியாவில் தங்க நகைக்கடன் சந்தையில் முதலிடத்தில் தமிழ்நாடு!

*டெல்லி, அக்.8-*

*2026 மார்ச் நிலவரப்படி இந்திய தங்க நகை கடன் சந்தையில் மொத்த மதிப்பு 18லட்சத்து 60ஆயிரம் ரூபாய் கோடியாக உள்ளது.*

*இதில் தமிழ்நாட்டில் வழங்கப் பட்ட தங்க நகைக்கடன்களின் மதிப்பு மட்டும் 6லட்சம் கோடி ரூபாய் ஆகும். அதாவது இந்திய நகைக்கடன் சந்தையில் தமிழகம் மட்டும் 3ல் 1 பங்கை வைத்துள்ளது.*

*3 லட்சத்து 10ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புடன் ஆந்திரா 2வது இடத்திலும், 1லட்சத்து 80ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புடன் கர்நாடகா 3ஆம் இடத்தில் உள்ளன, தெலுங்கானாவில் வழங்கப்பட்ட தங்க நகைக்கடன் மதிப்பு சுமார் 1லட்சத்து 60ஆயிரம் கோடி ரூபாயாக உள்ளது.*

*கேரளாவில் இது 1லட்சத்து 50ஆயிரம் கோடி ரூபாயாகவும், மகாராஷ்டி ராவில் 1லட்சத்து 10ஆயிரம் கோடி ரூபாயாகவும் இருக்கிறது.*

*60ஆயிரம் கோடி ரூபாய் நகைக்கடன் மதிப்புடன் குஜராத் 7வது இடத்தில் இருக்கிறது, உத்திரபிர தேசம் 40ஆயிரம் கோடி ரூபாய் நகைக்கடன் மதிப்புடன் 8வது இடத்தில் உள்ளது.*

### குஜராத் மாநிலத்துக்கு தொடர்ந்து முன்னுரிமை

## உச்சநீதிமன்ற நீதிபதிகள் நியமனத்தில் பாரபட்சமா?

### 7 மாநிலங்களுக்கு வாய்ப்பு ஏதுமின்றி புறக்கணிப்பு!

*புதுடெல்லி, அக்.8-*

*உச்ச நீதிமன்றத்தில் அலகாபாத் உயர் நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை 4 ஆக உயர்ந்த வேளை யில், 7 மாநில உயர் நீதி மன்றங்களுக்கு போதிய பிரதிநிதித்துவம் புறக்க ணிக்கப்பட்டுள்ளது.*

*இந்திய நீதித்துறையின் உச்ச அமைப்பான உச்ச நீதிமன்றத்திற்கு பல்வேறு மாநில உயர் நீதிமன்றங் களில் பணியாற்றும் நீதிப திகள் கொலீஜியம் அமைப் பின் பரிந்துரையின்படி நியமிக்கப்பட்டு வருகின்ற னர். இந்த நடைமுறையில் நாட்டின் அனைத்துப் பகுதி உயர் நீதிமன்றங் களுக்கும் சமமான பிரதிநி தித்துவம் மற்றும் வெளிப் படைத்தன்மை அளிக்கப் பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பு நிலவி வருகி றது. இந்நிலையில், தலைமை நீதிபதி சூர்யகாந்த் தலைமையி லான உச்ச நீதிமன்ற கொலீஜியம் கடந்த செப் டம்பர் 28ம் தேதி கூடி எடுத்த முடிவின்படி, குஜ ராத் உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியாக இருந்த சுனிதா அகர்வால், டெல்லி தலைமை நீதிபதி டி.கே.உபாத்யாயா. தெலங்கானா தலைமை நீதிபதி அபரேஷ் குமார் சிங் ஆகிய 3 பேர் உச்ச நீதி மன்ற நீதிபதிகளாகப் பத வியேற்றுக்கொண்டனர். இதில் களிதா அகர்வால், டி.கே.உபாத்யாயா ஆகிய இருவரும் தாய் நீதிமன்ற மாக அலகாபாத் உயர் நீதி மன்றத்தையும், அபரேஷ் குமார் சிங் ஜார்கண்ட் உயர் நீதிமன்றத்தையும் சேர்ந்தவர்கள் ஆவர். அகில இந்திய நீதிபதிகள் பணி மூப்புப் பட்டியலில் முறையே 4, 5, 6 ஆகிய இடங்களில் இருந்த இவர் களைப் பரிந்துரைத்த தன் மூலம், ஹரீஷ் தாண்டன், சவுமென் சென், ஜி.எஸ். சந்த வாலியா ஆகிய 3 தலைமை நீதிபதிகளின் பணி மூப்பு திட்டமிட்டுப் பின்னுக்குத் தள்ளப்பட் டுள்ளது பெரும் சர்ச்சை யையும் கேள்விகளையும் கிளப்பியுள்ளது.*

*இந்த புதிய நியமனங்களின் மூலம் உச்ச நீதிமன்றத்தில் அலகா பாத் உயர் நீதிமன்றத்தின் பிரதிநிதித்துவம் 4 ஆக உயர்ந்து முதலிடத்தைப் பிடித்துள்ளது.*

*இவர்களைத் தொடர்ந்து குஜராத், மத்திய பிரதேசம்.*

*பஞ்சாப் மற்றும் அரியாளா உயர் நீதிமன்றங் களைச் சேர்ந்த தலா 3 நீதி பதிகளும், மும்பை, கொல் சுத்தா, டெல்லி, ஜார் கண்ட், கர்நா சென்னை மற்றும் ராஜஸ்தான் உயர் நீதிமன்றங்களிலிருந்து தலா 2 நீதிபதிகளும் உச்ச நீதிமன்றத்தில் அங்கம் வகிக்கின்றனர். மேலும் ஆந்திரா, சட்டீஸ்கர், கேரளா, பாட்னா, கவுகாத்தி, மணிப்பூர், தெலங் கானா ஆகிய உயர் நீதி மன்றங்களில் இருந்து தலா ஒருவர் என உள்ளனர். ஆனால் இமாச்சல பிரதே சம், ஜம்மு-காஷ்மீர் மற் றும் லடாக். மேகாலயா, ஒடிசா, சிக்கிம், திரிபுரா, உத்தரகாண்ட் ஆகிய 7 உயர் நீதிமன்றங்களில் இருந்து உச்ச நீதிமன்றத்தில் ஒரு நீதிபதி கூட இல்லாத நிலை ஏற் பட்டுள்ளது. அரசியல மைப்பு சட்டப்பிரிவு 124ன் கீழ் நியமனங்கள் நடக்கும் சூழலில், பிரதிநிதித்துவம் இல்லாத மாநிலங்கள் தொடர்ந்து புறக்கணிக்கப்படும் அபா யம் உள்ளதாகவும், ஒன் றிய அரசு மற்றும் கொலி ஜியம் நடத்தும் இந்த சமர சப் போக்கால் உச்ச நீதி மன்றம் அனைத்து தரப் பையும் உள்ளடக்கிய அமைப்பாக நீடிக்குமா என்றும் சட்ட வல்லுநர் கள் எச்சரித்துள்ளனர்.*

## வீட்டில் தனியாக இருந்த மூதாட்டி கழுத்து நெரித்து கொலை!

### சேலத்தில் சம்பவம்!

*சேலம், அக்.8-*

*சேலத்தில் வீட்டில் தனி யாக இருந்த மூதாட்டி கழுத்து நெரித்து கொலை செய்யப்பட்டு, 6 பவுன் நகைகளை கொள்ளைய டிக்கப்பட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்ப டுத்தி உள்ளது.*

*சேலம் கிச்சிப்பாளையம் கடம்பூர் முனியப்பன் கோவில் தெருவில் வசித்து வந்தவர் ஜனா பாய்.*

*80 வயதான இவருக்கு 2 மகன்கள் 3 மகள்கள் உள்ள நிலையில், கடைசி மகன் மட்டும் தனது தாயோடு வசித்து வந்துள்ளார். வழக் கம் போல் அவரது மகன் வேலைக்கு சென்று விட்டு மாலை வீடு திரும்பிய போது, தனது தாய் ரத்த வெள்ளத்தில் கொலை செய் யப்பட்டு கிடந்ததைக் கண்டு அதிர்ச்சி அடைந் தார். இதுகுறித்து காவல்நி லையத்தில் புகார் அளித் தார். இதனைத் தொடர்ந்து காவல்துறையினர் நடத்திய விசாரணையில், கொலை செய்யப்பட்ட ஜனா பாய் கழுத்தில் அணிந்திருந்த தங்க சங்கிலி, வளையல் உள்ளிட்ட நகைகள் கொள் ளையடிக்கப்பட்டிருந்தது தெரியவந்தது. குடி யிருப்பு கள் நிறைந்த பகுதியில் வீட் டில் தனியாக இருந்த மூதாட்டி கொலை செய்யப் பட்டு நகைகள் கொள்ளை யடிக்கப்பட்ட சம்பவம் அந்த பகுதி மக்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்ப டுத்தி உள்ளது.*



கோவை மாவட்டம், பொள்ளாச்சி தெற்கு மற்றும் வடக்கு ஒன்றிய மகளிர் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் நடைபெற்ற 'சமுதாய வளைகாப்பு நிகழ்வில் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர், திருப்பூர் தெற்கு மாவட்ட பொறுப்பாளர் கே.ஈஸ்வரசாமி கர்ப்பிணி பெண்களுக்கு வளைகாப்பு சீர் வழங்கினார். இதில் சட்டமன்ற உறுப்பினர்கள் மு.ஜெயக்குமார், நித்தியானந்தம் உள்பட ஒன்றிய கழக செயலாளர்கள், உள்ளாட்சி மக்கள் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.